**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 131/2021**

**Deposition of Witness for : PW 13**

**Name** : திரு. காமராஜ்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12-10-2023.**

**(A1 to A3 present)**

முதல் விசாரணை -

நான் தற்போது காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். நான் மங்கலம் காவல் நிலையத்தில் 2017ம் வருடம் தலைமைக் காவலராக பணியில் இருந்த போது 9.3.2017ந் தேதி பணியில் இருந்த போது ஆய்வாளரின் உத்தரவின் படி மங்கலம் காவல் நிலைய குற்ற எண் 53/2017 சட்டப்பிரிவுகள் 174 குவிமுச என்ற வழக்கு சம்மந்தமாக ரமேஷ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு காலை 10 மணிக்கு சென்று மருத்துவ அலுவலரிடம் வேண்டுகோள் கடிதம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு இறந்த ரமேஷின் சகோதரர் ரவி என்பவரிடம் பிரேதத்தை ஒப்படைத்தேன். இறந்து போன ரமேஷ் அணிந்திருந்த கருநீலகலர் பேண்ட் - 1 (சா.பொ. 5) புளூ கலர் கோடு போட்ட அரைக்கை சட்டை - 1 (சா.பொ. 6) வெளிற் நிற கட் பனியன்-1 (சா.சொ. 7) ஆகியவற்றை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

ஆய்வாளர் பிரேத விசாரணைக்காக காலை 9.15 மணிக்கு அழைத்தார். இறந்து போன ரமேஷின் உடல் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் இருந்தது. அவர் ஜீப்பில் வந்திருந்தார். நான் இரு சக்கர வாகனத்தில் வந்தேன். யார் முதலில் அரசு மருத்துவமனைக்கு வந்தது என்று எனக்கு நினைவு இல்லை. புளூ கலர் கோடு போட்ட அரைக்கை சட்டை ரத்தக்கறையுடன் காணப்பட்டது. கருநீலக்கலர் பேண்ட் ஒன்று அதிலும் ரத்தக்கறை காணப்பட்டது, டிசைன்

இல்லை. வெளிற் நீல கலர் கட் பனியன் ஒன்று ஆகியவற்றைத் தான் நான் கோவிந்தசாமி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரிக்கவில்லை. 9.3.2017ந் தேதி மதியம் 2 - 3 மணிக்கு மேல் அய்வாளரிடம் சென்று பணிஅறிக்கை செய்தேன். நான் எந்த பணியையும் செய்யவில்லை என்றும், ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- காமராஜ்

Taken down by me in Open Court read over to the witness
and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.